DMC CUM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 45 /2024, Mangalamedu P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தேசப்பிரியன் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | கலியமூர்த்தி | Occupation | : | சுகர் மில்லில் வேலை |
| Village | : | தேவையூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 33 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.08.2025 | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சுகர் மில்லில் வேலை செய்து வருகிறேன். அஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கில் இறந்துபோன கலியமூர்த்தி எனது அப்பா ஆவார். கடந்த 27.01.2024 ம் தேதி நான் சர்க்கதை ஆலையில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனது அப்பா கலியமூர்த்தி சாலையை கடப்பதற்காக திருச்சி டு சென்னை பைபாஸ் ரோட்டை கிழக்கிலிருந்து மேற்காக சென்றபோது எதிர் திசையில் வந்த கார் மோதி எனது தந்தை சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக வெங்கடேசன் மற்றும் சதீஷ் ஆகியோர் சம்பவத்தை பார்த்துவிட்டு என்னிடம் தகவல் சொன்னார்கள். நான் மாலை 5.30 ,6 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று எனது தந்தையின் உடலைப் பார்த்தேன். பின்னர் போலிசார் 108 ஆம்புலன்ஸ் மூலம் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

2. விபத்தை ஏற்படுத்திய காரின் பதிவு எண் ஞாபகம் இல்லை. அந்த காரின் ஓட்டுனர் யார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.த.சா.ஆ 1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தாரகள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. எனது தந்தை இறந்துவிட்ட தகவல் எனக்கு எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால் 5 மணிக்கு கிடைத்தது. தகவல் போன் மூலம் சொன்னார்கள். போலிசார் விசாரணையில் எந்த தொலைபேசி எண்ணில்இருந்து எனக்கு த கவல் வந்தது என போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 45 /2024, Mangalamedu P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வசந்தா | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | கலியமூர்த்தி | Occupation | : | மகளிர் சுய உதவிக்குழுவில் வேலை |
| Village | : | தேவையூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 50/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.08.2025 | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மகளிர் சுய உதவிக்குழுவில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 27.01.2024 ம் தேதி அன்று மாலை 3.30 மணியளவில் எனது கணவர் சாலையை கடக்கும்போது விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :-(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பணித்தபோது குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார் அதனால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JUM COURT KUNNAM

DMC - CUM - JM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 45 /2024, Mangalamedu P.S. PW -3.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சதீஷ்குமார் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | கணேசன் | Occupation | : | கார்பென்டர் |
| Village | : | தேவையூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 36/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.08.2025 | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கார்பென்டராக வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடைதுதான். மேற்படி கையொப்பம் கடந்த 28.01.2024 ம் தேதி மாலை 5 மணியளவில் மங்களமேடு காவல் ஆய்வாளர் தேவையூர் கட்ரோடு அருகே கலியமூர்த்தி என்பவர் 27.01.2024 அன்று மாலை 4 மணியளவில் விபத்தில் இறந்தது சம்பந்தமாக விசாரிக்கவந்திருந்தனர், நான் கையெழுத்து செய்தது பேப்பரிலா அல்லது நோட்டிலா என்று எனக்கு தெரியவில்லை. என்னுடன் வெங்கடேசன் என்பவரும் கையெழுத்து செய்தார். பார்வை மகசரில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. இறந்துபோன கலியமூர்த்திக்கு நான் உறவினர் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் முன்னாடி எழுதி இருந்தார்கள் பின்னாடி தான் கையொப்பம் செய்தேன். அந்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று என்னிடம் படித்து காட்டினார்களா என்றால் படித்து காட்டவில்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.